தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

புரட்டாதி 1999

இதழ் – 6

"...எலக்சன்கள் வருகுது.
ஏதாச்சும் நம்மட எடத்தை
புடிச்சு சிங்கள் சனத்த
பேக்காட்ட , நம்ம
தலையிலதான் குண்டுகள்
விழப்போகுது. இப்படி
எத்தனய தாங்கிட்டம்.'..."

# வவுனியா: பீடை தொலைந்தது !

நீண்ட நாளைய வவுனியா மக்களை கிலி கொள்ள வைத்தபுளொட் மாணிக்கதாசன் என்ற பீடை , போராட்டத்தை பீடித்திருந்த கறை அழிக்கப்பட்டது என வவுனியா மக்களும் முழு தேசமும் நிம்மதிப்பெரு மூச்சு விட்டிருப்பார்கள். உள்ளுக்கும்வெளியிலும் பல நூறு போராளிகளின் கொலைகளின் சூத்திரதாரி பல நூறு மக்களை சித்திரவதைக்கும் கொலைகளுக்கும் உள்ளாக்கியவும்பன்ஒழிந்ததெனமக்கள் ஆசுவாசப்பட்டிருப்பார்கள். அண்மையில் கூட பள்ளி மாணவர்கள் பலரை இந்த கூட்டம் வேட்டையாடிய கொடுரத்தை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இவனுடைய அழிவை அவனை பிடிக்காத அவனது சகாக்கள் கூட கொண்டாடினர் எனவும் செய்தி உள்ளது. இந்நேரம் உள்ளிருந்த பலர் கிடைத்த பணத்தை சுரட்டிக்கொண்டு மாறியிருப்பார்கள். ஏற்கனவே அப்படி பலர் மறைந்து விட்டார்கள்என்பது தகவல்.

இந்த நிம்மதி மக்களுக்கு நிலைக்குமா? இவர்களை கடந்த காலங்களில் பாதுகாத்து வந்த அரசும், படை அதிகாரிகளும் இன்னும் இருக்கின்றார்களே. எனவே இந்த தற்காலிக நிம்மதி நிலைக்காது என்பதுதான் நிஜம். இப்படியானவர்களுக்கு படைக்களங்களும் பல்வேறு வாய்ப்புகளையும் அளித்து காத்து வந்த அந்த எஜமானர்களான அடக்குமுறை அரசும் அதிகாரிகளும் இன்னமும் நமது மண்ணில் இருக்கின்றனரே. இந்த ஆக்கிரமிப்பாளர்கள் இவன்களை போன்ற இன்னும் பலரை, கொலைப்படைகளை உருவாக்கி கொண்டிருக்கின்றார்களே. இதற்கு முடிவுஎப்போது? அதுவரை நிம்மதி என்பது தற்காலிகமானதுதானே? ஒரு பிரிவு பலவீனமாக மற்றொரு பிரிவு இவனது கைங்கரியங்களை செய்ய காத்திருக்கின்ற வரை இந்த நிம்மதி மக்களுக்கு எப்படி நிலைக்கும்?

வதை முகாம்களினதும் வதையாளர்களினதும் பெயர்கள் மட்டும்தான் மாறப்போகின்றது. நிகழ்வுகள் தொடரத்தான் போகின்றது. காரணம் இதன் உற்பத்தியாளர்கள் நம்மண்ணை இன்னமும் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு இறுதி மரண அடி கொடுக்கும் வரை இதற்கு முடிவு இருக்காது. மனித உரிமை அமைப்புகளும், பிபிசி யும் வெரிடாசும் எத்தனை அம்பலப்படுத்தியும் இந்த வதையாளர்களை எவ்வளவு இறுமாப்புடன் இந்த அரசும் படையதிகாரிகளும் காப்பாற்றி வந்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இந்த வெற்றிடத்தை நிரப்ப இவர்களுக்கு எவ்வளவு நேரமாகும்?

இருந்தும், என்றைக்காவது ஒரு நாள் மக்களுக்கு கிடைக்கவிருந்த வாய்ப்பு, தமது மக்கள் நீதி மன்றத்தில் இவன்களை நிறுத்தி விசாரித்து தண்டனை வழங்கும் அந்த வாய்ப்பு தவறிப்போய்விட்டது. இவர்கள் ஒழிந்தாலும் இவர்களால் இழைக்கப்பட்ட அட்டுழியங்கள் தோண்டி எடுக்கப்பட்டு வரலாறாக்கப்பட வேண்டும். காரணம் இவர்களால் கொல்லப்பட்டவர்களின் வரலாறு மக்களுக்கு தெரிய வைக்கப்பட வேண்டும். உண்மைக்கும் இலட்சியத்திற்குமாக புறப்பட்டு உருத்தெரியாமலாக்கப்பட்ட எண்ணற்ற ஜீவன்களை மக்கள் மறந்துவிட முடியுமா? அவர்களுக்கு நாம் உண்மையான அஞ்சலியை செலுத்த வேண்டாமா?

★

## ஜடா காமலிற்றா
## சித்திரவதை – வன்புணர்ச்சி – கொலை:

நமது தேசத்தின் இளம் பெண்ணான 21 வயதுடைய ஜடா காமலிற்றா கடந்த 12-7-99 அன்று ஆயுதம் தாங்கியவர்களால்சித்திரவதைக்கும்வன்புணர்ச்சிக்கும் உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இதைச்செய்தவர்கள் தமிழ் கூலிக்குழுவொன்றைசார்ந்தவர்களாகும்என தெரியவருகிறது. தமது சொந்த தேசத்து பெண்களின்மீதே மிருகத்தனமாக நடந்து கொள்ளும் அளவிற்கு தேசத்துள் குருரத்தனம் வளர்ச்சி பெற்றுள்ளமை அதிர்ச்சி தருவதாக உள்ளது.

மாற்று இயக்கங்களை சேர்ந்த ஒருவரின் குடும்பத்து பெண்களை வன்முறைக்கு உள்ளாக்கி விடும்இந்த குருர அரசியல்நமது தேசத்தற்குள் உருப்பெற்றிருக்கும் அபாயகரமான போக்காக உள்ளது. இந்த குருர அரசியலை நாம் தொடர விடக்கூடாது. பல்வேறு வகையிலும் துன்புறுத்தப்பட்டு வரும்நமது பெண்களை பாதுகாப்பது நம்தேசத்தின் கடமையாகும். நமது பெண்கள் மீது வன்முறையை பிரயோகிக்கும் எவரையும் எந்த அரசியல் பிரிவினரையும்தேசத்தின் வாழ்விலிருந்தும் அரசியலில் இருந்தும் அகற்றியாக வேண்டும். தனிமைப்படுத்த வேண்டும். நமக்குள் நிலவும் மாறுபட்ட அரசியல் போக்குளை கடந்து நம்மீது கவிழும் இந்த ஆபத்தை தேசமாக திரண்டு எதிர்க்க வேண்டும்.

பெண்கள் மீதான பாலியல் குற்றங்களுக்கு ஒரு போதும் மன்னிப்பு கிடையாது. இது போன்ற பாலியல் மற்றும் கொலைக் குற்றங்களில்ஈடுபட்ட அனைவரும் மக்கள் நீதிமன்றத்தின் முன் தண்டனைக்குரியவர்களாகும்.

தேசம் இதனை பார்த்துக்கொண்டு மௌனம் சாதிக்கும் எனின் இந்த குருர செயலானது, நம் ஒவ்வொருரின் வாசல் கதவுகளையும் தட்டுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சிங்கள அரசு தனது நீட்டப்பட்ட கரங்களான இந்த கொலைப்படைகளை கொண்டு, தொடர்ச்சியாக இப்படிப்பட்ட கொரூரங்களை நன்கு திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்வோம்.

## கதிர்காமர்:
## சர்வதேசிய சோவினிஸ்ட் !

நாடு பிரிவடைய ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சிறிலங்காவில் மட்டுமல்ல, உலகில்எந்த வொரு நாடுமே பிரிவடைவதை நாம் அனுமதிக்க முடியாது என்பது கதிர்காமரின் கூற்று. இவருக்காக நாம் இந்த பத்திரிகையில் சில பந்திகளை ஒதுக்கவேண்டுமா என்ற போதிலும் ஒரு சர்வதேச சோவினிஸ்டை குறித்து விழிப்புணர்வை கொண்டிருப்பதன் அவசியம் நமக்கு உள்ளது.

தேசங்களின் ஒன்றியத்தில் (ஐ.நா) பல வருட காலம் கடமையாற்றிய இந்த கதிர்காமர் உலக வரலாற்றில் இருந்து எதுவுமே கற்றுக்கொள்ளவில்லையா என்பது ஒரு கேள்வி. அவர்கள் வரலாறு கற்பதெல்லாம் பெயருக்கு பின்னால் பட்டங்களை செருகிக்கொள்வதற்காக மட்டுமே. இப்படி இன்னும் சில தமிழ் பேசும் சிங்கள சோவினிஸ்டுகள் இங்கு உள்ளனர் என்பதுபதில்.

நேற்றுவரை , சர்வதேசிய அளவில் அடக்கப்படும் தேசங்களின் உரிமைகாகவும் நீதியான சமாதானத்திற்காகவும் செயற்படும் சர்வதேச சமாதானக்குழுக்களுடன் இணைந்து இவர் செயற்பட்டிருக்க கூடும். அப்போதெல்லாம் வெளிப்படாத பிரிவினைக்கு எதிரான இவரது இலட்சிய வேட்கை, சிங்கள அரசு இயந்திரத்தின் சுகபோகம், சிங்கள் சோவிஸ்ட்டுகளின் புகழ்ச்சிகள், தமது மேட்டுக்குடி 'மேண்மைகளைத் தக்க வைத்தல் என வந்ததும் இன்று மிகத்தீவிரமாகத்தான் வெளிப்படுகிறது. நமது தேசத்திற்கு எதிராக மட்டுமல்ல, திமோரி மக்களுக்கு எதிராக, பலஸ்தீன மக்களுக்கு எதிராக, கொசோவா மக்களுக்கு எதிராக, இன்னும் போராடிக் கொண்டிருக்கின்ற, போராடப்போகின்ற தேசங்களுக்கு எதிராகவும் இவரது சோவினிச வெறி இலக்கு வைத்துள்ளது. சோவினிச வெறி தலைக்கு ஏறிவிட்டால் அது தனக்கு தானே அழிவை தேடிக்கொள்ளும் என்பது வரலாறு.

தமது அதிகார வேட்கைக்காக நமது தேசத்தை அழிக்க மட்டுமல்ல, அடக்குமுறைக்கு எதிராக போராடிவரும் எண்ணற்ற தேசங்களையும் அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டுள்ளனர் இவரும் இவர் போன்றவர்களும். இதுவரை தமிழ் பேசும் சிங்கள சோவினிஸ்டாக சேவகம் செய்ததையும் தாண்டி இவர் இன்று சர்வதேச அளவிலான சோவினிஸ்டாக பரிணமித்துள்ளார். வியக்கத்தக்க முன்னேற்றம்.

★

# மரணங்களும் கண்டனங்களும்

நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டார்!

இன்று இது ஒரு பழைய செய்தியாகி விட்டது.

அவர் தண்டிக்கப்பட்டது நியாயமானதா? அநியாயக் கொலையா? கண்டிக்கப்பட வேண்டிய நடவடிக்கையா? எனும்கேள்விகள்நமது மக்கள் மத்தியிலிருந்தும் பல்வேறு அரசியல் தரப்பினரிடமிருந்தும் எழும்பியவண்ணம் உள்ளன. நம்மைப் பொறுத்தவரையில் இந்நடவடிக்கை நியாயமானதா இல்லையா என்பதைத் தர்க்கிப்பதைவிட நாம் எப்பொழுதும் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமொன்றுள்ளது.

நமது தேசத்திற்கு இருப்பை வழங்கிடும், மனிதர்களுக்கேயுரித்தான உழைப்பிலீடுபடுவதன் மூலம் தேசத்தின் வாழ்வைத் தாங்கி நிற்கும் நமது மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் நாளாந்தம் கொல்லப்பட்டு வருகின்றனர். இக்கொலைகள்பற்றி யாரும்பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. மறுபுறம்தேசத்தின் விடுதலைக்காகப் போராடும்போராளிகள்மரணிக்கின்றனர். இந்த அர்ப்பணிப்புகளில் அக்கறை கொள்வார்யாருமில்லை. இந்த மரணங்கள் எல்லாம் நீலனின் மரணத்தைவிட எவ்வகையில்குறைவானவை?

நீலன்படித்தவர், பண்பானவர், சந்திரிக்காவிற்கே ஆலோசகராக இருக்கின்றார், ஐ.நாவில் பேசுகின்றார், இலங்கையில் சமாதானத்திற்காக(?) புதிய அரசியல் யாப்பை உருவாக்குகின்றார், அத்துடன் தமிழ்சமூகத்தின்"உயர்த்தப்பட்ட" சாதிய மேட்டுக்குடிப் பிரிவைச் சார்ந்தவராக இருக்கின்றார் என்ற பெருமைகளைக், கொண்டிருப்பதால்அவரதுமரணம் அல்லது கொலை அல்லது தண்டனை பெரிதாகப் படுகின்றதா!

நாள்தோறும்தன்உடலைஅர்ப்பணிக்கும் விடுதலைப் போராளியானால் என்ன, கொலைசெய்யப்படும்சாதாரணபொதுசனமாக இருந்தால் என்ன இவர்கள் நம் தேசத்தின் வளம்என்பதை ஒரு கணம்நாம் மறந்ததுஎப்படி?இவர்களில்நம்தேசத்தை வழிநடத்தக்கூடிய தலைவர்கள்எத்தனை பேரை நாள்தோறும் இழக்கின்றோம். இவர்களில் நீலனைவிட ஆளுமையும், அறிவும்,புத்திசாதுரியமும்,உயர்ந்தபண்பும் கொண்டவர்கள் அல்லது எதிர்காலத்தில் அவ்வாறு வரக்கூடியவர்கள், தேசத்திற்காக நேர்மையாக உழைக்கக்கூடியவர்கள் எத்தனை பேர் இருந்திருப்பர். நாம் இவர்களைப்பற்றி இதுவரை சிந்திக்காதது ஏன்?மரணங்கள் தொடர்பாக நாம்கடைபிடிக்கும் இந்த இரட்டை நிலைப்பாடு நம்சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தும் சித்தாந்த கோளாறு என்றே கருதுகின்றோம்.

உடல்உழைப்பிற்கும்மூளை உழைப்பிற்கும் நாம் காட்டும் இந்த பாகுபாடு, தர வேறுபாடுதான் மேற்குறிப்பிட்ட மரணங்கள் தொடர்பான நமது இரட்டை நிலைப்பாட்டிற்குக் காரணமாகக் கருதுகின்றோம். இங்கு நாம் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். எந்த உழைப்பும் ஒன்றைவிட ஒன்று குறைந்ததல்ல. மூளை உழைப்பிற்கு உயிரையும் உருவத்தையும் கொடுப்பது உடலுழைப்பு என்பதை நாம் மறுக்கமுடியாது. இவ்வடிப்படையில்நமக்கு முக்கியமாகப்படுவது மக்கள் மீதான படுகொலைகளும் போராளிகளின் மறைவுமே. இவற்றை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியதே நமது அக்கறைகள். இவ் இழப்புகளுடனும் கொலைகளுடனும் ஒப்பிடும் பொழுது நீலன் எனும் தனிநபரின் மரணம் முக்கியத்துவம் அற்றதே.

நீலனின் இம்முடிவு சிங்களப்பேரினவாதிகளையும்குறிப்பாக சிறிலங்கா ஜனாதிபதி உட்பட்ட ஆட்சியாளர்களையும் பெரிதும் கலவரத்திற்குள்ளாக்கி விட்டுள்ளது. கண்டனக்குரல்கள் அவர்கள் மத்தியிலிருந்து ஒலித்தவண்ணமுள்ளன. சிங்களப் பேரினவாதிகளின் நலன்களிற்காக தமிழ் தரப்பிலிருந்து செயற்பட்ட ஒருவரை இழப்பது என்பது அவர்களைப் பொறுத்தவரை மிகவும் கஸ்டமானதுதான்.

இவ்விடத்தில் நாம் சிங்களப் பேரினவாதிகளை நோக்கியும் ஒரு கேள்வியை எழுப்புகிறோம்: “சிங்கள தேசத்தின் வறுமையையும் வேலையில்லா பிரச்சனையையும் பயன்படுத்தி சிங்கள தேசத்தின் இளம் சந்ததியை பணம் வழங்கி யுத்த களத்தில் நாள்தோறும் நீங்கள் கொலை செய்வது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? உங்கள் தேசத்தைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லையா? இக் கொலைகளை விட நீலனின் கொலை உங்களுக்குப் பெரிதாகவும் முக்கியமானதாயும் தெரிவதற்கு காரணம் என்ன? தமிழ் மக்கள் மீது உங்களுக்கு இருக்கும் அக்கறையா? அல்லது உங்கள் பேரினவாதத்திற்கு முட்டுக்கொடுத்து வந்த தமிழரை இழந்து விட்டீர்கள் என்பதனாலா?”


சர்வதேச அரங்கிலிருந்தும் நீலனுக்காக அனுதாபச் செய்திகள் ஒலிக்கின்றன. நீலனின் கொலை நடவடிக்கைக்கு கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. சில காலத்திற்கு முன்பு தென்னாசியமக்கள்பலர் குறிப்பாக இலங்கைத்தமிழர்கள்ஐரோப்பிய நாடுகளுக்கு வருவதற்காக இரகசியமாக கப்பலொன்றில் பயணம் செய்தனர். அக் கப்பல்இன்னொரு கப்பலொன்றுடன்மோதியதில் அதிலிருந்த பலர் மரணித்தனர். பலர் கடலில் தத்தளித்தனர். மரணத்துடன் போராடியவர்கள் பலர். இதில்குழந்தைகளிலிருந்து வயோதிபர்வரை இருந்தனர். இம் மரணங்கள் பற்றி நன்கு தெரிந்தும், இது தொடர்பாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க தொடர்பூடகங்கள் ஒரு வார்த்தைதானும் கூறவில்லை. இச்சம்பவம் நடைபெற்ற இதே நாளில்அமெரிக்க கடலில்ஒரு விளையாட்டு வீரர் காணாமல் போய்விட்டார் என நாள் முழுதும் அது தொடர்பான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன அமெரிக்க தொடர்பூடகங்கள்.

ஒரு அமெரிக்கரின்உயிருக்கு அளித்த முக்கியத்துவம்பல தென்னாசிய மக்களின் உயிருக்கு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசுகளால்வழங்கப்படவில்லை. இதனுடன் ஒப்பிடுகையில்சாதாரண பல தமிழர்களின் மரணத்தை விட நீலன் எனும் தனியொரு தமிழரின்மரணம்மேற்கு நாட்டவர்களுக்கு, குறிப்பாக அமெரிக்காவுக்கு முக்கியமாக இருப்பதற்கான காரணம் என்ன? மூன்றாமுலக நாடுகள்தொடர்பான ஏகாதிபத்தியக் கொள்கையைப் பிரதிபலித்தவர் எனும் வகையில் நீலனின் மறைவு அமெரிக்காவுக்கும், ஐ. நா.வுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்என்பதில்சந்தேகமில்லை.

மக்களின் நலன்களுக்கு மாறாக செயற்படும்தனிநபர்களின்மரணங்கள்நமது அக்கறைக்குரியவையல்ல. எனினும் தனிநபர்களை அழித்தொழிப்பதன் மூலம் நமது இலக்கை நாம் அடைந்துவிடுவோமா எனும் கேள்வியையும்நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். மாறுபட்ட அரசியல் சிந்தனையுடையவர்களை அழித்தொழிப்பதன் மூலம் நமது கருத்துக்களை உறுதியாக நிலைநாட்டிட முடியுமென நாம் கருதுகிறோமா? நமது போராட்டத் தரப்பிலேயே எத்தனை மாறுபட்ட அரசியல் போக்குகள், சிந்தனைகள் வெளிப்படுகின்றன? நமது சமூகத்தில், மக்கள் மத்தியில் எத்தனை வகைப்பட்ட சிந்தனைகள் நிலவுகின்றன? இவற்றையெல்லாம் நாம் எவ்வாறு வெற்றிகொள்ளப் போகிறோம்? நாம் சரியானதெனக் கருதும் அரசியல் சிந்தனையை தொடர்ச்சியாகவும் திட்டமிட்டமுறையிலும் பிரச்சாரப்படுத்துவதனூடாக மக்கள் மத்தியில் நமது அரசியலை சுவரப்பண்ணுவதன் மூலமே மக்களை வென்றெடுப்பதன் மூலமே எம்மால்எமது கருத்துக்களின் வெற்றிக்கு அடித்தளமிட முடியும்.

தனிநபர் கொலையால் எப்பொழுதும் நாம் விரும்பும் பாய்ச்சலையும், அரசியல் சூழ்நிலை மாற்றங்களையும் வெற்றிகரமாக ஏற்படுத்திட முடியாது. எதிரிகள் தம்மை திட்டமிட்ட முறையில்பிரதியீடு செய்ய தயாராயிருப்பார்களானால் நமது நடவடிக்கையும் இழப்புகளும் அர்த்தமற்றதாகிவிடும். அத்துடன் இது குறுகியகால வெற்றிகளுடன் மட்டுப்பட்ட நடவடிக்கையாகும். மக்களைபார்வையாளர்களாக இருக்கச் செய்துவிட்டு நாம் மேற்கொள்ளும் எந்த முயற்சிகளும் பூரண வெற்றிக்கு எம்மை இட்டுச் செல்லாது. மக்களின் சுதந்திர அரசியல் செயல்பாட்டுக்குக் களமமைப்பது, மக்களை அரசியல் மயப்படுத்துவது, பல்வேறு வடிவங்களிலுமான மக்கள் போராட்டங்களிலில்ஈடுபட மக்களுக்கு பக்கபலமாயிருப்பது, தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறுமனே ஆயுத அமைப்புகளின் தலைமையிலானதாக அல்லாமல் மக்களின் தலைமையிலான போராட்டமாகப் பரிணமிக்கச் செய்வதன்மூலமே நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றியின் இலக்கை நோக்கி உறுதியாக இட்டுச்செல்லமுடியும். இந்த உண்மையை போராளிகள் எனும் அடிப்படையில் நாம் புரிந்தேற்றுக் கொள்ளாத வரையில்எதிரிக்கு சாதகமான களத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறவர்களாகவேயிருப்போம்.

★



மூலம் : மார்கரேட் - தமிழில்: இந்திரன்

# "பெண் உடல் சிதைவு" எனும் கருத்தாக்கம் குறித்து

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலீடுபட்டு வரும் பெண்களின் பாத்திரம் தொடர்பாக பல்வேறு குற்றச் சாட்டுகளும், அவதூறுப்படுத்தல்களும் இப்போராட்டத்திற்கு வெளியிலிருக்கும் சிலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. போராட்டத்தில் பெண்கள் ஆண் தலைமையின் கைப்பொம்மைகளாக நடாத்தப்படுகின்றனர், பெண்கள் பலிகடாக்களாக்கப்படுகின்றனர், பெண்களின் உடல்சிதைக்கப்படுகிறது என்பதான கருத்துக்கள் இப்பிரிவினரிடமிருந்து வெளிப்படுகின்றன. இது ஒரு சேர போராட்டத்தையும் போராளிப் பெண்களின் பாத்திரத்தையும் பற்றிய எதிர்மறை கருத்துக்களைப் பரப்பிடும் நடவடிக்கையாயுள்ளது.

நமது போராட்டத்திற்கு வெளியிலிருந்து போராளிப் பெண்களான நம்மைப்பற்றி வெளிப்படும் அனுதாப வடிவிலான அவதூறுப்படுத்தல்களுக்கும், அதன்மறுபுறம் நமது போராட்ட அகச் சூழலில் பெண்கள் நமது நிலைக்குமிடையே தெளிவான கோடுகளைக் கீறிக்கொள்வது சமூக அளவிலான பெண்களின் விடுதலையை நாடும் நமக்கு பிரதானமானதாகும்.

தமிழீழ தேச விடுதலைப் போராட்டமானது ஆண்களால் தலைமைதாங்கப்படும் ஆணாதிக்கப் பண்பால் கட்டமைக்கப்பட்ட போராட்டமாகவே இன்றுவரையிலும் தொடர்கிறது. போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிக்கவும் தலைமை தாங்கவுமான அடிப்படை உரிமைகள் பெண்கள்நமக்கு மறுக்கப்பட்டே வருகின்றன. தேசவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புகளில் பெண்கள் நாம் தீவிரமாக செயற்பட்டாலும் ஆண்தலைமைகளால் துணைப்பாத்திரம் ஆற்றுபவர்களின் ஸ்தானத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளோம். இது தொடர்பாக பெண்களான நாம் ஆழமான விமர்சனங்களைக் கொண்டுள்ளோம்.

தேசவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதானது எமது அடிப்படை உரிமை என்பதையும் போராட்டத்தில் பங்குபற்றுவதனூடாகவே இப்போராட்டத்திலுள்ள ஆணாதிக்கப் போக்குகளுக்கெதிராகப் போராடுவதும், தேச அரசியலில் பெண்களின் தலைமைத்துவத்தை, ஆளுமையை உறுதிப்படுத்துவதும் சாத்தியப்படும் என்பதையும் இன்று நமது தேசத்தின் சில பெண்களாவது பிரக்ஞைபூர்வமாக உணரத் தொடங்கியிருப்பதானது பெண்களின் நிலையில் பலமான அம்சமாகும். ஆண்தலைமையால் பெண்களின் போராட்ட உள்ளாற்றல் ஆணாதிக்க அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் அதே நேரம், பெண்களின் நிலையில் தேசவிடுதலைப் போராட்டத்திலான பங்களிப்பானது நிர்ப்பந்தத்துடன் கூடியதாகவாயுள்ளதா? போராட்டத்தில் ஈடுபடுவது தொடர்பாக பெண்களுக்கு சுயதெரிவொன்று இல்லையா? பெண்கள் பலவந்தமாகவும் ஏமாற்றப்பட்டுமா போராட்டத்தில் இணைக்கப்படுகிறார்கள்? முற்றிலும் பிரக்ஞையற்ற பலிகடாக்களாகவா போர்க்களத்தில் தள்ளப்படுகின்றனர்?

இனவெறி சிறிலங்கா அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளினால் 1970 களின் ஆரம்பத்திலேயே இளம்தமிழ்சந்ததி தனது தலைவிதியை தானே தீர்மானித்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது. போராட்டம் பல்வேறு வடிவங்களினூடாகவும் எழுச்சி பெற்றது. இளைஞர் அமைப்புகள், இரகசிய ஆயுதக் குழுக்கள் என பன்முக வடிவில் இயங்கிக் கொண்டிருந்த தேசவிடுதலைப் போராட்ட அமைப்புகளில் பெண்களும் அவற்றின் ஆரம்பங்களிலிருந்தே ஈடுபட்டிருந்தனர். 70 களின் தொடக்கத்தில் தமிழ் தேச அரசியலில் அதிர்வை ஏற்படுத்திய தமிழ் இளைஞர் பேரவையில் துணிகரமும் ஆளுமையும் நிறைந்த பெண்கள் செயற்பட்டு வந்தனர். எண்ணிக்கை ரீதியில் மிகச் சிலராய் இருந்தாலும் இப்பெண்களே விடுதலைப் போராட்ட அரசியலில் பெண்களின் பிரவேசத்திற்கு அடித்தளமிட்டவர்களாவர். நமது தேசம் இவர்களுக்கு என்றும் தலைவணங்கும்.



பகிரங்க அரசியலில் எதிரிக்கெதிராக செயற்பட்டுவந்த பெண்கள், தேசவிடுதலைப் போராட்டம் இரகசிய தலைமறைவு ஆயுதப்போராட்டமாக பரிணமிக்கையில் தம்மையும் அதற்கேற்ப தகவமைத்துக் கொண்டனர். வெகுசன அரசியல் போராட்டம், மக்கள்திரள் செயற்பாடு என்பதனூடாக பெண்களின் போராட்டம் இன்று ஆயுதப் போராட்ட வடிவத்திற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. தேச விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் வகிக்கும் இன்றைய நிலையானது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெண்களது செயற்பாட்டின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமேயாகும்.

இதைக் குறிப்பிட்ட அமைப்புகளுடன் மட்டுப்படுத்திப் பார்க்காது தேசம் சார்ந்த பெண்களின் அரசியல் செயற்பாடாக பார்க்கையில்தான் இதன் தார்ப்பரியத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆயுதப்போராட்ட வடிவத்திற்கு பரிணமித்திருக்கும் தேசவிடுதலை அரசியலில் தம்மை ஆயுதப் போராளிகளாக பெண்கள் விருப்புடனேயே முன்வந்து இணைத்துக் கொள்கின்றனர். தேசத்தின் விடுதலையை மனதிற்கொண்டு சுயவிருப்புடனேயே போர்க்களம் செல்கின்றனர். தேசத்தை நசுக்கும் எதிரிகளை அழித்தொழிப்பதற்காக தம்மையே அர்ப்பணித்துக்கொள்ளும் நடவடிக்கைகளிலும் பெண்கள் தம்மை விருப்புடனேயே ஈடுபடுத்திக்கொள்கின்றார்கள். பல்வேறு பௌதீகக் கஷ்ரங்களுக்கூடாகவும் உடலை வருத்தும் கடினமான ஆயுதப் பயிற்சிகளிலீடுபட்டு போர்க்களம் செல்லும் நிலைக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றனரென்றால், அதன் பின்னாலுள்ள பெண்களின் மனவுறுதியின் ஆழம் அவ்வளவு எளிதாக எடைபோடக் கூடியதல்ல. இதையெல்லாம் கருத்திற்கெடுக்காது பெண்களின் போராட்ட பாத்திரத்தை அவர்களின் சிறுபிள்ளைத்தனமானதும், அறியாமையினதும் பாற்பட்ட நடவடிக்கையாகக் குறுக்குவது போராட்ட வரலாற்றில் பெண்களது பங்குபற்றல், ஆளுமை, உள்ளாற்றல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளாத சமூகக் குருட்டுத் தனத்தையேக் குறிக்கிறது.

இன்று உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் குறிப்பிடத்தக்கப் பாத்திரமாற்றி வருகின்றனர். விடுதலைப் போராட்டங்களை பலவழிகளிலும் தோற்கடிப்பதற்கு முயன்றுவரும் ஏகாதிபத்தியங்கள் போராட்டங்கள் பற்றிய அவதூறுப்படுத்தல்களை தமது போராட்ட எதிர்ப்பு வழிமுறைகளிலொன்றாகக் கொண்டுள்ளன. அத்தகையதொரு நடவடிக்கையே போராளிப் பெண்களின் பாத்திரத்தை சிறுமைப்படுத்தி மேற்கொள்ளப்படும் பிரச்சாரமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலீடுபடும் பெண்களின் பாத்திரம் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நாம் இத்தகையப் பின்புலத்திலேயே பார்க்க வேண்டியுள்ளது. பெண் உடல்சிதைக்கப்படுகிறது எனும் குற்றச்சாட்டு நமது போராட்டத்திற்கெதிராக சர்வதேச அளவில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகிறது. தமிழீழ தேசவிடுதலைப் போராட்டம் பெண்உடல், இரத்தம், சதைக்குவியல் எனும் திகிலூட்டும், அருவருப்புணர்வைத் தூண்டும் கருத்தாக்கங்கள் திட்டமிட்ட முறையில் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் போராட்டம்பற்றிய பயப்பிராந்தியை மக்கள் மத்தியிலும் குறிப்பாக பெண்கள் மத்தியிலும் பரப்பிடும் ஒரு முயற்சியாகவே இதுவுள்ளது. மக்களது ஆயுதப்போராட்டங்களை மனிதாபிமானமற்ற, ஜனநாயக விரோத செயற்பாடாக சித்தரிக்கும் ஏகாதிபத்திய சித்தாந்தங்களுக்குப் பலியாகிப் போன சிலரே தமிழீழ பெண்போராளிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிராக இத்தகையக் கருத்துக்களைப் பரப்புபவர்களாயுள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்ட நமது போராளிப் பெண்களின் உடலை சிதைத்து, உயிரற்ற உடல்களை நிர்வாணமாக படமெடுத்து தமது தொடர்பூடகங்களினூடாக உலகெங்கும் ஆணவத்துடன் பிரச்சாரப்படுத்திய சிங்கள இனவெறி ஆணாதிக்க அரசின் வக்கிரத்தனமான செயலை மௌனமாக அங்கீகரித்த இப்பிரிவினர், தமது தாயகத்தை எதிரியிடமிருந்து மீட்பதற்காக பெண்கள் தம்மைத் தாமே அழித்துக்கொள்கையில் மாத்திரம் ஏன் அனுதாபக்குரல் கொடுக்கின்றனர்?

எம்மைப்பொறுத்தவரையில், நமது தேசத்தின் விடுதலைக்காக் செயற்பட்ட, செயற்பட்டுவருகின்ற பெண்கள் அனைவரும் தேசத்தின் உயர்வான கௌரவத்திற்குரியவர்களாவர். அவர்கள் ஒவ்வொருவரினது உயிரும், உணர்வும், உடலும் பெறுமதிமிக்கதாகும். தேசத்திற்காக இவை அர்ப்பணிக்கப்படுகையில் அம்மகத்தான தியாகமானது விடுதலைப்பாதையில் என்றும் சுடரொளியாய் மிளிர்வதை நாம் உணர்கிறோம். நமது பெண்களின் இம்மகத்தான போராட்ட உள்ளாற்றலை தன்னிச்சையாக தூற்றுபவர்கள், அவர்கள் என்னதான் ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் உயர்த்திப்பிடிப்பதாக நினைத்துக்கொண்டிருப்பினும், நமது தேசிய போராட்டத்தை மழுங்கடிக்க சிங்கள இனவெறி அரசிற்கு சேவைசெய்யும், போராளிப் பெண்களை அவமதிக்க ஆணாதிக்கத்தை துணைக்கழைத்துக் கொள்ளும் அதிகாரத்துவமான அரசியலையே வெளிப்படுத்துபவர்களாயுள்ளனர்.

இதன் மறுபுறம், ஏகாதிபத்தியங்களும் அவற்றின் சார்பு அரசுகளும் தம்மால் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்பு யுத்தங்களில் கண்மூடித்தனமாகக் குண்டுகளைப் பொழிந்து பொதுமக்களை எப்படியெல்லாம் கொன்றொழிக்கின்றன?

- ஈராக் மற்றும் சேர்பியா மீதான ஏகாதிபத்திய கூட்டு ஆக்கிரமிப்பில் பெண்களும் குழந்தைகளும் எத்தனை குரூரமாக உடல் சிதறடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அங்கவீனமாக்கப்பட்டுள்ளனர்?

- பாலஸ்தீன அகதிமுகாம்கள் மீதான ஏகாதிபத்திய - சியோனிச கூட்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட மனித அழிவுகளை அவ்வளவு எளிதில் உலகம் மறக்குமா?

- வியட்நாமிலும் பிலிப்பைன்சிலும் பெண்போராளிகள் மீதான அமெரிக்க இராணுவத்தின் சித்திரவதைகள்... அமெரிக்க சிறைக்கூடங்களில் கறுப்புப் பெண்போராளிகள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் பெண்போராளிகள் மற்றும் ஒருபாலுறவினர் மீது மேற்கொள்ளப்படும் இரும்புத்திரை துன்புறுத்தல்கள்.

(தொடர்ச்சி 07இல்)

# கிழக்கு தீமோர்

# சுதந்திரக் குடியரசை நோக்கி...

ஓகஸ்ட் 30ம் திகதி கிழக்கு தீமோரில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றது. பூரண இறைமையுள்ள, சுதந்திர நாடாக பிரிந்து தனித்து வாழ்வதா அல்லது இந்தோனிசியாவுடன் இணைந்த குடியரசாக வாழ்வதா என்பதை தீமானிக்கும் பொறுப்பு மக்களிடம் கையளிக்கப்பட்டது. மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களித்தனர். பெருமளவு மக்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களிப்பர் என்ற நிலையில் இந்தோனிசிய அரசினால் திட்டமிட்டு உள்நாட்டுக் கலவரம் தூண்டி விடப்பட்டிருந்தது. 75 சதவீதமானோர் சுதந்திர திமோருக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இந்நிலையில் அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலைகளின்விளைவாக பலபேர் கொல்லப்பட்டு கலவரங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. இக் கலவரத்திற்கான பின்னணி என்ன?

கிழக்கு தீமோர் 1975ம் ஆண்டுவரை போர்த்துக்கீசரின் கொலனியாக இருந்து வந்தது. இவர்களது ஆட்சிக்காலங்களில் இந்த நாட்டை எந்தளவிற்கு சுரண்ட முடியுமோ அந்தளவிற்கு சுரண்டினர். பல கொலனித்துவ நாடுகளை தங்களுக்கு அருகில் கொண்டிருந்த போர்த்துக்கீசர்களுக்கு, தூர இருந்த கிழக்கு தீமோரை அபிவிருத்தி செய்யுமளவிற்கு அக்கறை கொள்ளவில்லை. இதற்கு பிற கொலனி நாடுகளில் கொலனிய ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களும் காரணம் என அறியக் கிடக்கின்றது. இவர்களது ஆட்சியின் இறுதிக் காலங்களில் கிழக்கு தீமோரின் தலைநகர் டில்கியை (Dilki) தமது தேவைக்கேற்றாற் போல் அபிவிருத்தி செய்தனர்.


போர்த்துக்கீசர்கள் 75ம் ஆண்டு தீமோரை விட்டு, வெளியேறியபோது இன்றைய சுதந்திர கிழக்கு தீமோருக்கான புரட்சிகர முன்னணி மக்களால் தெரிவு செய்யப்பட்டது. அப்புரட்சிகர முன்னணியின் ஆட்சிக்காலம் மூன்று நாட்கள் கூட நீடிக்கவில்லை.

போர்த்துக்கீசர் வெளியேறிய மூன்றாம் நாள் இந்தோனிசிய அரசாங்கம் தனது இராணுவத்தை அனுப்பி கிழக்கு தீமோரை ஆக்கிரமித்தது. புதிய சுதேசிய ஆட்சியாளர்கள் காடுகளுக்குள் தலைமறைவாகினர். இந்தோனிசியா அரசு கிழக்கு தீமோரை தனது 27வது மாகாணமாகப் பிரகடனப்படுத்தியது. இப் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்கவில்லை. அன்றிலிருந்து தனது அடக்குமுறை ஆட்சியை திட்டமிட்டு, இந்தோனிசியா நடாத்தி வருகின்றது. சுமார் 20,000 இந்தோனிசிய இராணுவம் கிழக்கு தீமோரில் நிலைகொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தோனிசியா இராணுவத்தினால் கொல்லப்பட்ட மக்கள் மொத்த தீமோர் மக்களில் மூன்றில் ஒரு பகுதியாவர் எனில், இவர்களது ஒடுக்குமுறையின் கோரம் தெரிய வரும். அதாவது 200,000 மக்கள் இவர்களால் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். இது மட்டுமின்றி கிழக்கு தீமோரின் வறுமை மற்றும் வேலையில்லாப் பிரச்சினைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இம் மக்களின் ஒரு பிரிவினரைக் கொண்டே தமக்கு சார்பான ஒரு இராணுவத்தையும் வளர்த்து வருகின்றது, ஆக்கிரமிப்பு அரசு. இவர்கள் இந்தேனிசிய சார்பு இராணுவம் என்றும் அல்லது சுதந்திரத்திற்கு எதிரான இராணுவம்என்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு கிழக்கு தீமோர் மக்களுக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தி தமது ஆட்சியை நடாத்துகின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பு அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கு கிழக்கு தீமோர் மக்களை சுதந்திர கிழக்கு தீமோருக்கான புரட்சிகர முன்னணி வழிநடாத்துகின்றது.. இப் போராட்டம் கடந்த 24 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. கிழக்கு தீமோர் சுதந்திரத் தனிக் குடியரசாக அமைய வேண்டும் என்பதே இவ்வமைப்பின் இலட்சியமாகும்.. இந்தோனிசிய இராணுவம் ஆக்கிரமித்த ஆரம்ப காலங்களில் இவ்வமைப்பு, தனது 90 விதமான ஆயுதங்களை இழந்தது. தன்னிடமிருந்த நூற்றுக்கணக்கான போராளிகளில் 80 விதத்தினரை இழந்தது.

இவ்வாறான ஒரு சூழலில்தான் 74ம் ஆண்டு இவ்வமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்ட ஜோஸ்எக்ஸ்னா குஸ்மா (Jose Xanana Gusmas) 75ம் ஆண்டு இதன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இதன்பின் இவ்வமைப்பு மக்களின் பெரும் பங்களிப்புடன் உலக நாடுகளின் ஆதரவுடன் [illegible] யின் விழிகாட்டலில் தன்னை சீரமைத்துக் கொண்டு முன்நோக்கிச் சென்றது. இன்று மிகப் பலம் வாய்ந்த அமைப்பாக இது திகழ்கின்றது.



கிழக்கு தீமோரின் மன்டேலா என வர்ணிக்கப்படும் எக்ஸ்னா குஸ்மா மக்களால்மிகவும்மதிக்கப்படும்தலைவராக செயற்படுகின்றார். இவர் 92ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தோனிசிய இராணுவத்தால் கிழக்கு தீமோரின் தலைநகரான டில்கியில் கைதுசெய்யப்பட்டார். விசாரணையின் முடிவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இவருக்கு பின் ஆயுட் தண்டனையாக குறைக்கப்பட்டது. நெல்சன் மண்டேலா இந்தோனிசியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட போது இவரை சந்திக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். முதலில் மறுக்கப்பட்டு பின்னர் அனுமதிக்கப்பட்டது. இரண்டரை மணித்தியாலங்கள் இருவருக்குமிடையில் பேச்சு நடைபெற்றது. 52 வயதையுடைய இவர் எதிர்காலத்தில் கிழக்கு தீமோர் நாட்டின் தலைவராக வரக்கூடியவர் எனக் கருதப்படுகின்றார். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த, ஜோஸ் எக்ஸ்னா குஸ்மா, என்னைவிட நாட்டின் தலைவராக வரக்கூடியவர்கள் பலர் இருக்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

இவரைவிட மேலும் இரு தலைவர்கள் மிகவும்முக்கியமானவர்களாகக்கருதப்படுகின்றனர். இவர்கள் இருவருக்கும் 96ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல்பரிசு வழங்கப்பட்டது. இவர்களில் ஒருவர் ஜோசே ராமோஸ் ஹோர்ட்டா (Jose Ramos Horta). குறுகிய கால புரட்சிகர முன்னணியின் கிழக்கு தீமோர் அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டார். இப்பொழுது தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ளும் இவர் கிழக்கு தீமோர் மக்களின் விடுதலைக்காக சர்வதேச ஆதரவைப் பெறுவதற்காக பெரும் பங்காற்றுகின்றார். "நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்யாது நிற அடக்குமுறையை இல்லாதொழிப்பது எவ்வாறு அர்த்தமற்றதோ அவ்வாறானது தான் எக்ஸ்னா குஸ்மாவை விடுதலை செய்யாது கிழக்கு தீமோர் மக்களின்மீதான அடக்குமுறையையும் இல்லாது செய்வது அர்த்தமற்றது" என இவர் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மற்றையவர் மேற்றிராணியார் காலோஸ் பெல்லோ (Bishop Carlos Belo). கிழக்கு தீமோர் இந்தோனிசியாவுடன் இணைந்த சுயாட்சியை விரும்புபவர் இவர். சுதந்திரம்என்பது படுக்கையறை ரோஜாப் பூ அல்ல எனக்கூறும்இவர் கிழக்கு தீமோரில் இந்தோனிசிய அரவு நடாத்தும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத்தொடர்ந்து குரல்கொடுத்து வருகின்றார்.

கிழக்கு தீமோர் 12 தனித்துவமான இனக் குழுமங்களைக் கொண்ட ஒரு தேசமாகும். பூகோள ரீதியில், இது இந்தோனிசியாவிற்கும் அவுஸ்ரேலியாவிற்கம் இடையில் உள்ள ஒரு தீவாகும். இங்குள்ள ஒவ்வொரு இனக் குழுமத்திற்கும் சொந்தமாக ஒவ்வொரு மொழி உள்ளது. 75ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 680,000 சனத்தொகையைக் கொண்ட இத்தீவில் 97 சதவீதத்தினர் தீமோரிய மக்கள். இறுதியாக எடுக்கப்பட்ட 89ம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி 800,00 சனத்தொகையைக் கொண்டுள்ளனர். இவர்களில் 78 விதத்தினர் தீமோரிய மக்கள். 20 விதத்தினர் இந்தோனிசியர். இவர்களை இந்தோனிசிய அரசாங்கம் திட்டமிட்டு குடியேற்றி வருகின்றது.

கிழக்கு தீமோர் சுதந்திர தனிக் குடியரசாக மாறும் நிகழ்வானது இந்தோனிசியாவின் அரசியலில் முக்கியமான பங்கை வகிக்கின்றது. இந்தோனிசிய அரசியல் சூழல் தற்போது மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் கட்டத்தில் இது இன்னும் முக்கியத்துவமிக்கதாகின்றது.

கடந்த ஜுன் மாதம் 7ம் திகதி 44 ஆண்டுகளின் பின் 48 கட்சிகள் பங்குபற்றிய "நியாயமான" தேர்தல் நடந்தள்ளது எனக் கருதப்படுகின்றது. இந்தோனிசிய பாராளுமன்றத்தில் 500 ஆசனங்களில் 38 ஆசனங்கள் இராணுவத்திற்குரியது. இவ் ஆசனங்களுக்கு தேர்தல்கள் [illegible] பெறுவது இல்லை. இந் நாட்டில் அரசியல் ரீதியாகவும் மற்றும் இராணுவ ரீதியாகவும் அதிகமான அதிகாரங்களை உடையவர்களாக இந்தோனிசிய இராணுவம் உள்ளது. இவ் இராணுவத்தின் தலைமையில் செயற்படும் கிழக்கு தீமோரின் சுதந்திரத்திற்கு எதிரானவர்கள் சர்வசன வாக்கெடுப்பில் மக்கள் பங்குபற்றாதவகையில் பயமுறுத்தல்களையும் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டனர். இந்தோனிசிய அரசியல்தலைமைக்கு கட்டுப்படாது இராணுவம் தன்பாட்டிற்கு செயற்படுவதாக இதற்கு காரணம் கற்பிக்கின்றனர்.

இதேவேளை இந்தோனிசிய தேர்தல் இறுதி முடிவுகள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளிவராத நிலையில் உள்ளன. கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தோனிசியாவின் ஸ்தாபகரான சுகர்னோவின் புதல்வி மேகாவதி சுகர்னோ பொடி வெற்றி பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. மக்கள் தமது [illegible] வாக்குச் சீட்டுக்களில் கை அடையாளங்களைப் பதித்து வாக்களித்துள்ளனர். மேகாவதி சுகர்ணோ பொடி கிழக்கு தீமோரின் சுயாட்சிக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஆளுங் கட்சியாக இருந்தது, இரண்டாம் இடத்திற்கு வந்தள்ளது. இதேவேளை இந்தோனிசிய முஸ்லிம் தலைவர்கள் ஒரு பெண் நாட்டை ஆட்சி செய்யமுடியாது எனவும் மேகாவதிக்கு அனுபவம் போதாது என்ற எதிர்ப்புக் குரல்களும் வந்த வண்ணமள்ளன. எதிர் வரும் நவம்பர் மாதம் புதிய ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக பதவி ஏற்க வேண்டும். இந்த நிலையில் கிழக்கு தீமோரின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

சர்வதேச ரீதியாகவும் இந்தோனிசியா முக்கியத்துவமானதாக விளங்குகின்றது. அதன் புவியியல் இருப்பிடம் மற்றும் ஆழமான கடல் என்பன இதற்கான காரணங்களாக

(தொடர்ச்சி 07இல்)

# ஏகாதிபத்திய சூறையாடலுக்குள்ளாகும்

# தமிழீழ வளங்கள் !

தமிழீழ குடியரசு அமைவதும், மக்களின் பொருளாதார வாழ்வு மேம்படுதலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததாகும். தமிழீழ மக்களான நமக்கு தேசிய பொருளாதார கொள்கையொன்று அவசியமாகும். அதற்கு முன்னிபந்தனையாக, நாம் நமது தாயகத்தின் இயற்கை வளங்கள் தொடர்பான அறிவைப் பெற்றிருப்பது முக்கியம். நாம் இதுபற்றி அறிந்திராவிட்டாலும் நமது பொது எதிரியான ஏகாதிபத்தியம் இது பற்றி நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறது என்பதையும், நமது நேரடி எதிரியான சிறிலங்கா பேரினவாத அரசின் ஒத்துழைப்புடன் தமிழீழத்தின் கனிவளங்களை சூறையாடும் காரியத்தை ஏகாதிபத்தியம் எப்போதோ ஆரம்பித்து விட்டது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்று சிறிலங்கா அரசின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் காணப்படும் பெருமதிமிக்க கனிவளங்களை ஏகாதிபத்தியங்கள் தமக்குள் பங்குபோட்டுக்கொண்டுள்ளன. தமிழீழத்திலும் பெறுமதி மிக்க கனிவளப் பிரதேசங்கள் சிறிலங்கா அரசால் ஏகாதிபத்தியங்களுக்கு விற்கப்பட்டுள்ளது. இதில் பெருமளவு உடைமை கொண்டிருப்பது அமெரிக்க ஏகாதிபத்தியமே.

திருகோணமலைப் பிராந்தியத்தின் கடற்கரை மணல்வெளி உலகின் மிகவும் வளமிக்க கனிப்பொருட்கள் அடங்கிய மணல்வெளிகளிலொன்றாகும். இக்கனிவள மணல் திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட புல்மோட்டைக் கடற்கரையில் காணப்படுகிறது. புல்மோட்டைக் கடற்கரையில் 10 கிலோ மீற்றர் நீளமும் 100 மீற்றர் அகலமும் விஸ்தீரணமுடைய பிரதேசத்தில் 4,000,000 தொன் நிறையுடைய கனிவளமண் நிறைந்துள்ளது. இதில் புதைந்துள்ள செறிவான கனிப்பொருள் வளத்தின் காரணமாக இப்பிரதேசமானது உலகின் எந்தக் கனிவள பிரதேசத்துடனும் ஒப்பிட முடியாதளவிற்கு உயர்வான கனிவளம் மிக்க பிரதேசமாயுள்ளது. நமது தாயகத்தின் நமக்கேயுரித்தான இந்த வளமான மணல் பிரதேசத்தை ஏகாதிபத்தியம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. தன்னிஷ்டத்திற்கு இல்மனைட் மணலை கொள்ளையடித்துச் செல்லும் ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்கார நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

தமிழீழத்தின் கிழக்குக் கரையின் நாயாறு, கொடுவாக்காட்டுமூலை, தவிக்காலு ஆகிய பிரதேசங்கள் உட்பட்ட நீண்ட கரையோரமாக மிகவும் அடர்த்தியான கனிவளமணல் பிரதேசங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 3,00,000 டொன் இல்மனைட்டும், 6,000,000 டொன் ருட்டைலும் 4,000,000 டொன் சிக்ரோனும் அடங்கியுள்ளது. திருகோணமலைப் பிராந்தியத்தின் சேருவில பகுதியில் copper-magnetite -apatite இருப்பது 1993 இல்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வுகளின்படி 4 மில்லியன் தொன் நிறையுள்ள உலோகம் புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 40வீதம் இரும்பும் 1.5வீதம் - 2வீதம் செப்பும் அடங்கியுள்ளது.

அதேபோல் யாழ்ப்பாண குடாநாட்டில், வடக்கே வல்லிபுரம் தொடங்கி தெற்கே அம்பன் வரையிலான பிரதேசத்தில் பலநூறு ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணாடி மணல் காணப்படுகிறது. சீமெந்துத் தயாரிப்பதற்கான பிரதான மூலப்பொருளான மயோசின் லைம்ஸ்ரோன் யாழ்ப்பாணத்திலும், பாரியளவு சீமெந்துக்கனி முருங்கனிலும் ஏனைய பிரதேசங்களிலுமிருந்துகிடைக்கப்பெறுகிறது.

கோறற்கற்களும், கடலுணவும், கடற்தாவரங்களும் மிக்க வளமான கடல்வளத்தையும், நெற்களஞ்சியமென வர்ணிக்கப்படுமளவுக்கு விளைச்சல்மிக்க விவசாய நிலத்தையும். கேந்திர முக்கியத்துவம் பெற்ற இயற்கைத் துறைமுகத்தையும் கொண்ட பிரதேசமாக தமிழீழமுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக ஏகாதிபத்தியங்களுக்கு மிகவும் தேவைப்படும் அணுக்குண்டுத் தயாரிப்பிற்காக உபயோகிக்கப்படும் யுரேனியம் புல்மோட்டை இல்மனைட் குவியலில் காணப்படுவதாகவும், அதே போல் அணுக்குண்டுத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் கனநீர் திருகோணமலைக் கடலில் இருப்பதாகவும் தகவல்கள் உள்ளன. இத்தகவல்கள் வெளிப்படுத்தப்படாது இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச்செய்திகளில் வெளியாகியுள்ளது.

இத்தனை பெறுமதிமிக்க நமது தாயகத்தை ஏகாதிபத்தியம் அவ்வளவு இலகுவில் இழக்க முன்வருமா? தமிழீழத்தின் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் இயற்கை வளங்களைக் கொள்ளையிடவும் அது தன்னாலான அனைத்து வழிகளையும் கையாளும். சுயாதீனமான தேசிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட சுதந்திர அரசொன்று தமிழீழத்தில் அமைவதை அது இலகுவில் அனுமதிக்கப் போவதில்லை. சிறிலங்கா அரசுக்கு நேரடியாக இராணுவ உதவி வழங்குவது மற்றும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரிப்பது யாவும் ஏகாதிபத்தியம் தமிழீழத்தை ஆக்கிரமிப்பதில் கொண்டுள்ள ஆர்வத்தையே வெளிப்படுத்துகின்றன.

நம்மைப்போன்ற மக்களின் உடலுழைப்பையும் மூளையுழைப்பையும் நமது பிரதேசங்களின் மூலப்பொருட்களையும் இயற்கை வளங்களையும், ஏன் நமது வான், நில, கடல் பிரதேசங்களையும் சூறையாடிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியமானது, தனது இந்த நடவடிக்கையை நம்மால் கண்டு கொள்ள முடியாத வகையில் மிகவும் சாதுரியமாகவே மேற்கொண்டு வருகின்றது. இதற்காக தனது தொடர்புசாதனங்களை உலகெங்கிலும் விரிவாக்கி தனது நடவடிக்கைகள் குறித்த ஒரு நேர்மறை அபிப்பிராயத்தை உருவாக்க முயன்று வருகின்றது. உதாரணத்திற்கு, நம்மூரில் விவசாய காணிகளை அபகரித்து, அங்கு நச்சுக் கழிவை வெளியேற்றும் தொழிற்சாலையை ஏகாதிபத்தியம் உருவாக்கினால், நமது கண்களுக்கு முதலில் தெரிவது நமக்கு கிடைப்பதாக சொல்லப்படும் வேலை வாய்ப்புகளும் வருமானங்களுமே. இந்நச்சுப்புகையாலும், இரசாயன கழிவுகளாலும் நமது உயிர் வாழ்வும், இயற்கையும் பாதிப்பிற்குள்ளாவதை நாம் முன்னுணர்வதில்லை. இவ்விடயத்தில் ஏகாதிபத்தியங்களின் கருத்தியல் சாதனங்கள் தீவிர பங்கை வகிக்கின்றன.

மேலும், வளர்ச்சி என்ற பெயரில், ஏகாதிபத்திய பாணியிலான தொழில்துறை வளர்ச்சியே நமக்கு காட்டப்படுகிறது. அவற்றின் அராஜக தொழில்துறை வளர்ச்சியையே மனித குலவளர்ச்சியாகவும், மனித குல நாகரீகத்திற்கு அடிப்படையாகவும் கற்பிதம் செய்யப்படுகிறது. சுதேச மக்களின் பாரம்பரிய வாழ்வியல் முறைகளுடன் சுயமிய விவசாய, மீன்பிடித்தொழில்கள், கீழைத்தேய மருத்துவம், கல்வி, கலாச்சார வாழ்வு யாவும் இந்த அராஜக அபிவிருத்திப்பயலில் அடித்து செல்லப்படுகின்றன. இங்குதான் நாம் நிதானமாக நமது தேசிய பொருளாதாரத்தை பற்றி சிந்திக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

ஏகாதிபத்திய அராஜக அபிவிருத்திக்கு எதிராக, நமக்கேயுரித்தான பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகளை பாதுகாத்து வளர்த்தெடுக்கும், நமது இயற்கைக்கும் உயிர்வாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத, நமது தேசிய நலன்களை முதன்மை படுத்திடும் பொருளாதார திட்டங்கள் நமக்கு தேவைப்படுகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது பாரம்பரிய சுதேச பொருளாதார வளர்ச்சியிலும் தங்கியுள்ளது என்பதை நினைவிற்கொள்வோம்.

ஏகாதிபத்திய பொது எதிரியை தோற்கடிப்பதானால் நாம் நமது அரசியலின் எல்லைகளை நமது போராட்டதிற்கப்பாலும் விரிவாக்குவதும், ஜனநாயகப்படுத்துவதும் அவசியமாகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திற்கு அரசியலில் சர்வதேசிய உணர்வும் ஜனநாயகத் தன்மையுமே முன்னிபந்தனையாகும். நம்மைப் போன்றே, சிறிலங்கா அரசினால் பல்வேறு அடக்கு முறைகளுக்குமுள்ளாகும் பரந்து பட்ட சிங்கள மக்கள், முஸ்லீம்மக்கள், மலையக தமிழர்களுடன் ஒருமைப்பாட்டையும், கூட்டிணைவையும் ஏற்படுத்திக்கொள்வது நமது ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திற்கு அத்தியாவசியமானது. இதற்காக பரஸ்பர புரிந்துணர்விற்கு வருவது என்பது பிளவுண்டு கிடக்கும் தேசங்களுக்கிடையிலான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் அமைகிறது. இது பாரிய, நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும், முன்னணியில் போராடிக் கொண்டிருக்கும் தேசம் எனும் வகையில் இவ்வரலாற்று கடமையை முன்னெடுக்க வேண்டியவர்களாக நமது தேசம் உள்ளது.

அதேபோல், நமக்கு அயலில், நம்மை போன்றே ஏகாதிபத்திய அடக்குமுறைக்குள்ளாகிவரும் தென்னாசியப்பிராந்தியத்திலுள்ள தேசங்களுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டை அமைப்பதும், சர்வதேச அளவில் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் ஆசிய, ஆபிரிக்க லத்தீன்மெரிக்க மக்களுடனும், மேற்குலகில் ஏகாதிபத்தியங்களுக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கும், எதிர்கலாச்சார, புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகளுடன் பொதுப்புரிந்துணர்விற்கு வருவதும் நமது கடமையாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பணியை கட்டியமைப்பதினூடாக ஏகாதிபத்தியத்தை தோற்கடிப்பதற்கான ஒரு அடித்தளத்தை நாம் இடமுடியும்.

ஏகாதிபத்தியங்கள் உலகையே தமது கால்களுக்குக் கீழ் கொண்டு வர எதனையும் செய்ய தயங்காத பொருளாதார, அரசியல், இராணுவ பலம் பொருந்திய அரச அதிகாரமுடைய அமைப்பாகும். சில குண்டுத்தாக்குதல்களாலும், துப்பாக்கிகளாலும் இதில் அசைவை ஏற்படுத்த முடியாது. மாறாக மக்களின் மாபெரும் போராட்ட சக்தியின் முன்னால் ஏகாதிபத்தியம் காகிதப்புலி என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது மக்களிடம் புதைந்துள்ள மாபெரும் போராட்ட பலத்தில் இந்த பொது எதிரியை நமது மண்ணிலும் தோற்கடிப்போம். ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாக இறைமைமிக்க ஜனநாயகக் குடியரசை படைத்திடுவோம்!

★

ஏகாதிபத்தியங்கள் உலகையே தமது கால்களுக்குக் கீழ் கொண்டு வர எதனையும் செய்ய துயங்காத பொருளாதார, அரசியல், இராணுவ பலம் பொருந்திய அரச அதிகாரமுடைய அமைப்பாகும். சிலகுண்டுத்தாக்குதல்களாலும், துப்பாக்கிகளாலும் இதில் அசைவை ஏற்படுத்த முடியாது. மாறாக மக்களின் மாபெரும் போராட்ட சக்தியின் முன்னால் ஏகாதிபத்தியம் காகிதப்புலி என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது மக்களிடம் புதைந்துள்ள மாபெரும் போராட்ட பலத்தில் இந்த பொது எதிரியை நமது மண்ணிலும் தோற்கடிப்போம்.

# "இஸ்லாமிய அடிப்படைவாதம்"

## எனும் கருத்தாக்கம் குறித்து...

அண்மைக்காலமாக "இஸ்லாமிய அடிப்படைவாதம்" (Islamic fundementalism) எனும் கருத்தாக்கம் சர்வதேச அரங்கில் விரிவாக்கம் பெற்று வருகிறது. நமது சூழலிலும் முற்போக்காளர்கள், ஜனநாயகவாதிகள், சமூக விஞ்ஞானிகள் என தம்மை அழைத்துக்கொள்ளும் பிரிவினர் மத்தியிலும் இதன் தாக்கம் பிரதிபலிக்கவே செய்கிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது உலகிலுள்ள பிற்போக்குத்தனங்களிலேயே மிகவும் பிற்போக்கான ஒரு போக்காக சித்தரிக்கப்பட்டு வருகிறது. ஈரானின் அயதுல்லா கொமெய்னி முதல் லிபியாவின் கடாபிவரை அனைவருமே இஸ்லாமிய அடிப்படைவாதிகளாக சித்தரிக்கப்படுகின்றனர்.

எதற்காக இஸ்லாமும் அதன் பற்றாளர்களும் மாத்திரம் இவ்வளவு கடுமையாகத் தாக்கப்பட வேண்டும்? ஏன் ஏனைய மதங்களும் அவற்றின் பற்றாளர்களும் அடிப்படைவாதத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு இத்தகையதொரு கண்டனத்திற்கு உள்ளாக்கப்படவில்லை? இதன் காரணங்களை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் இஸ்லாமிய அடிப்படைவாதம் எனும் கருத்தாக்கத்தின் முன்மொழிவாளர்கள் யார்? இதன் பின்னால் அவர்கள் கொண்டிருக்கும் நோக்கங்களும் நலன்களும் என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய உலகின் அனேகமான நவீன வளர்ச்சிகளும் தொழில்துறை முன்னேற்றங்களும் மத்திய கிழக்கிலிருந்து கிடைக்கப்பெறும் எண்ணையிலேயே தங்கியுள்ளன. இம்மத்திய கிழக்கு பிரதேசம் முழுவதையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருபவர்கள் யாரோ அவரே உலகில் மிகவும் வலிமைமிக்கவராகிறார். இந்த ஆக்கிரமிப்பு நோக்குடனேயே ஏகாதிபத்தியத்தால் மிகவும் தூரநோக்குடன் திட்டமிடப்பட்டு மத்திய கிழக்கில் இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டது. இதற்காக பாலஸ்தீனப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டு அம்மண்ணில் தலைமுறை தலைமுறைகளாக வாழ்ந்து வந்த சுதேச மக்கள் துரத்தியடிக்கப்பட்டனர். சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.... இவ்வாக்கிரமிப்பும் கொடுமைகளும் இன்றுவரை தொடரவே செய்கின்றன.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டமானது பல மத்திய கிழக்கு அரபு நாடுகளையும் அமெரிக்க - இஸ்ரேல் எதிர்ப்பு நிலைக்கு இட்டுச்சென்றதுடன், தமது சுயாதீனம், அரபு நாடுகளுக்கிடையிலான கூட்டுணர்வு ஆகியவை ஏற்படுவதற்கும் காரணமானது. 70களின் முற்பகுதியில் அன்றைய எகிப்திய ஜனாதிபதி அப்துல் நாசர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான சுயாதீனமான எகிப்தை நிர்மாணிப்பதில் முன்னோடியாய்ச் செயற்பட்டவராவார். அவரைத்தொடர்ந்து கடாபியும், சதாம் ஹுசைனும், ஈரானிய தலைமையும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு - சரணடைவுக்கெதிராக தமது இறைமையை நிலைநாட்டிடுவதற்காக செயற்பட்டு வருபவர்கள். இதை ஜீரணித்துக்கொள்ள முடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்நாடுகள் மீது நேரடி, மறைமுக ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டது. அவர்களை பல வழிகளிலும் அச்சுறுத்துகிறது. இதற்கெல்லாம் அடிபணியாததால் அவர்களை சர்வதேச பயங்கரவாதிகளாக முத்திரை குத்துகிறது.

வெறுமனே தனக்கு சவாலாயிருக்கும் குறிப்பிட்ட நாடுகளையும் தலைவர்களையும் ஒட்டுமொத்த உலக சமூகத்திலிருந்து ஓரங்கட்ட முனைவதுடன் நின்றுவிடாமல், ஒரு பரந்த சமூகத்தையே - குறிப்பாக எண்ணெய் வளம் மிக்க மத்திய கிழக்கை தமது இறைமையாக பெற்ற அரபு சமூகத்தையே - திட்டமிட்ட முறையில் உலக சமூக நல்லறவு, ஒருமைப்பாடு ஆகியவற்றிலிருந்து தனிமைப்படுத்தி ஒரு விதத்தில் தீண்டத்தகாதோராக்கும் நோக்குடன் "இஸ்லாமிய அடிப்படைவாதம்" எனும் கருத்தாக்கத்தை அமெரிக்கா அதன் ஐரோப்பிய பங்காளிகளுடன் இணைந்து ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய - அமெரிக்க வெள்ளைக் கிறிஸ்தவ மத கலாச்சாரத்திற்கு மாறான மத கலாச்சார பண்பாட்டையுடைய சமூகமெனும் வகையில் அரபு - இஸ்லாம் சமூகமானது வெள்ளை - கிறிஸ்தவ மைய உணர்வுக்கு வெளியிலுள்ள சமூகமாகும். அத்துடன் வெள்ளைக் கிறிஸ்தவ ஐரோப்பாவின் மிகக் குரூரமான 400 ஆண்டுகால சிலுவையுத்தத்தால் நேரடித் தாக்குதலுக்குள்ளாகி பெரும் அழிவுகளை எதிர்கொண்ட (பாரிய மனித அழிப்பு, சித்திரவதைகள், பெண்கள் மீதான மிகக் கொடுமையான வன்முறைகள், பல நூற்றாண்டுகால பாரம்பரியம் மிக்க விலைமதிப்பற்ற அறிவுப் பொக்கிஷங்கள், கலைகள், அழகுமிக்க பெருநகரங்கள், செல்வம் யாவும் அழிக்கப்பட்டதுடன் தமது பண்பாட்டு வாழ்வியல் முறைகளை கடைபிடித்து பேண முடியாது வாழ்நிலை சிதறடிக்கப்பட்ட) உலக சமூகம் எனும் வகையில் இஸ்லாமிய சமூகத்தின் வெள்ளைக் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு முற்றிலும் நியாயமானதே. பொதுவில், வெள்ளைக் கிறிஸ்தவ உலகே இஸ்லாமிய அரபுலகை ஆக்கிரமித்து வந்துள்ளது. இவ்வகையில், வெள்ளைக் கிறிஸ்தவ மேலாதிக்கத்திற்கெதிரான அரபு - இஸ்லாமிய உலகினால் வெளிப்படுத்தப்படும் எதிர்ப்புணர்வானது, உலகையே ஆக்கிரமிக்கத் துடித்துக் கொண்டிருக்கும், உலகின் மைய சக்தியாக தன்னை தக்கவைத்துக்கொண்டிருக்கும் ஆதிக்க சக்திக்கெதிரான அடக்கப்பட்ட பிரிவொன்றின் எதிர்ப்புணர்வாகும்.

இந்நிலையில் உலகின் புதிய ஆக்கிரமிப்புச் சக்தியாக தலையெடுத்திருக்கும் வெள்ளைக் கிறிஸ்தவ ஆதிக்கப் பிரிவின் பிரதிநிதியான அமெரிக்காவும் அதன் பங்காளிகளும் மத்திய கிழக்கில் தனது ஆதிக்கத்திற்கு எதிராக அணிதிரளும் சுயாதீனமும் கூட்டுணர்வுமுடைய அரபு நாடுகளை வெறுப்புடன் பார்க்கத் தொடங்கின. வெள்ளைக் கிறிஸ்தவ உலகு மாத்திரமல்ல, தம்மால் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளாகும் வெள்ளைக் கிறிஸ்தவ மையத்திற்கு வெளியிலிருக்கும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன்மெரிக்க மக்களும் கூட இஸ்லாமிய அரபுலகை அந்நியமாகவும் வெறுப்புடனும் பார்க்கவும், அரபு - இஸ்லாமிய எதிர்ப்பிற்கு தம்மோடு இவர்களையும் அணிதிரட்டவும் வேண்டிய தேவை அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கு ஏற்பட்டது. நவீன தொடர்பூடகத்தை இதற்கு தாராளமாகப் பாவித்துக்கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் வெள்ளைக் கிறிஸ்தவ பங்காளிகளும் "இஸ்லாமிய அடிப்படைவாதம்" எனும் கருத்தாக்கத்தை உலகெங்கும் பரப்பின. இதன் மூலம் தாம் மேற்கொண்டுவரும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும் ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு சித்தாந்த ரீதியான அடித்தளத்தை உருவாக்கி வருகின்றன.

இஸ்லாமிய சட்டதிட்டங்களை கறாராக பின்பற்றும் அரசுகளில் தமக்கு எதிரானவற்றை மட்டுமே இஸ்லாமிய அடிப்படைவாத அரசுகளாக இவர்கள் சித்தரிக்கின்றனர். கூடவே இஸ்லாமிய சமூகங்கள் மிகவும் பிற்போக்கான, ஜனநாயகமற்ற, நவீன மானுட நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட சமூகங்களாக இவர்களால் சித்தரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடத்தில் நாம் இஸ்லாமிய அடிப்படைவாதம் எழுச்சிபெற நேர்ந்ததற்கான சமூகக் காரணங்களையும் பார்த்தாக வேண்டியுள்ளது.

பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பும், மத்தியகிழக்கின் மீதான ஏகாதிபத்திய அச்சுறுத்தலும் இஸ்லாமிய மக்கள் சமூகங்களை தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் சுய அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டிய நிலைக்குத் தள்ளியது. இச்சமூகங்களின் முற்போக்கு ஜனநாயக பிரிவினர் அந்நிய அச்சுறுத்தலுக்கெதிராக செயற்பட்டாலும் இவர்கள் தாக்கமேற்படுத்தக்கூடியளவிற்கு மக்களின் வாழ்வோடு பிணையவில்லை. சமூக வாழ்வில் மந்தம் நிலவியது. இந்நிலையைக்கடப்பதனூடாகவே மக்கள் அந்நிய ஆதிக்கத்திற்கெதிரான பலமான சக்தியாக, பலமான சமூகங்களாக தம்மை கட்டமைத்திட முடியும் என்பதை மதவாத சக்திகள் கண்டனர். மக்களின் கல்வி, குடும்பவாழ்வு, பாரம்பரியம், கலைகள் அனைத்திலும் அடிப்படைவாதம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. இதன் மூலம் மக்கள் வாழ்வில் பகுதி நிவாரணம் கிடைத்ததென்பது உண்மையே. இறுக்கமான மத அடையாளங்களுக்கூடாக அந்நிய சக்திகளுக்கெதிரான தமது அரசியலை மக்கள் முன்னெடுத்தனர். அரபுத் தேசியவாதம் முதன்மைபெறுவதற்குப் பதில் இஸ்லாமிய மதவுணர்வுடன் கூடிய அரசியல் எழுச்சி மேலோங்குவதற்கு இதுவே காரணம்.

இன்று உலகில் மிகவும் கடும்போக்குடையனவாக சியோனிசம் (யூத மதம்), இந்துத்துவம், கத்தோலிக்கம் ஆகியனவுமுள்ளன. சியோனிசம் மற்றும் இந்துத்துவம் என்பன ஏனைய மக்கள் சமூகங்களுக்கெதிரான தமது ஆக்கிரமிப்புப் போக்கை பகிரங்கமாகவே கடைப்பிடிப்பனவாயுள்ளன. இவற்றுடன் ஒப்பிடுகையில் இஸ்லாமிய "அடிப்படைவாதமானது" தமது விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் மக்களின் அரசியல் உந்துசக்தியாயிருக்கிறதெனும் வகையில் அது முற்போக்கான பாத்திரம் ஆற்றுகிறதென்பது ஒருபக்க உண்மை. பொதுவில் இஸ்லாமிய அடிப்படைவாதம் என எடுத்து தாக்கிப்பதற்குப் பதிலாக குறிப்பான நிலைமைகளில் அதன் பின்னால் செயற்படும் அரசியலையே நாம் பார்க்க வேண்டும். இதுவே தேசியவாதத்திற்கும் பொருந்தும்.

எனினும் வெள்ளைக் கிறிஸ்தவ ஆதிக்க சிந்தனையுடைய அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் பிரச்சாரப்படுத்தி வரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய புனைவுகளின் பின்னாலிருக்கும் ஆக்கிரமிப்பு உணர்வு தொடர்பாக நாம் விழிப்புடனேயே இருக்க வேண்டும். வெள்ளைக் கிறிஸ்தவ ஏகாதிபத்திய முகாமினால் அடக்கப்படும் அதன் நேரடித் தாக்குதலுக்குள்ளாகும் ஒரு உலக சமூகமெனும் வகையில் அரபு - இஸ்லாமிய சமூகமானது, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராக போராடிக்கொண்டிருக்கும் ஏனைய விளிம்புநிலை மக்கள் சமூகங்களான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன்மெரிக்க மக்கள் பிரிவினரின் நட்பு சக்தியாகும். இவ்வகையில் இஸ்லாமிய சமூகத்திற்கெதிராக வெள்ளைக் கிறிஸ்தவ மைய ஆதிக்க சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் எல்லாவிதமான தாக்குதல்களுக்கு கெதிராகவும் இஸ்லாமிய சமூகத்துடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டியதும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கெதிராக தம்மையும் உலக நாடுகளையும் விடுவிப்பதற்காகப் போராடுவதும் வெள்ளைக் கிறிஸ்தவ ஆதிக்கத்திற்கு வெளியிலிருக்கும் அனைத்து மக்கள் பிரிவுகள் மற்றும் தேசங்களினதும் கடமையாகும்.

★

# ஆதிக்க அரசின் தகர்வில்தான்
# அனைத்து மக்களுக்கும் விடுதலை!

எமது மக்களின் விடுதலை பற்றிப் பேசும்போது சில விடயங்கள் அடிப்படையானவை. அவ்வகையில், நமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் சிறிலங்கா அரசின் இருப்புக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான உறவு குறித்து, நாம் முதலில் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது என்பது வெளிப்படை. இது ஒரு ஆழமான விடயம் என்ற போதிலும் இப்பத்தியில் சில விடயங்களை மட்டும் சுட்டிக்காட்டிச் செல்ல முடியும்.

கொலனித்துவ கால கட்டத்தின் பிற்பகுதியில் நிலவிய அரசு இயந்திரத்தின் கணிசமான இடங்களில் உள்ளூர் சிங்கள மேட்டுக்குடிகள் செல்வாக்கு செலுத்தி வந்தனர். இவர்களில் கொழும்பு மேட்டுக்குடி தமிழரும் ஒரு சிறு பிரிவினர். பிரிட்டிசார் இங்கிருந்து வெளியேறிய போது அரசு இயந்திரத்தின் எஞ்சியிருந்த பகுதிகளையும் இந்த சக்திகள் ஆக்கிரமித்துக் கொண்டனர். அப்போதிருந்த ஒப்பீட்டளவில் பலவீனமான அரசு உடனடியாக தன்னைப் பலப்படுத்த வேண்டியிருந்தது. இதற்காக தமது ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் தடையாகவும் இருந்த இரண்டு பிரிவினரை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. ஒன்று இடதுசாரிகள், மற்றது சிங்களவர் அல்லாத தரப்பினர். இரண்டையும் வெற்றிகரமாக செய்து முடிக்க சிங்கள பேரினவாதத்தை கருவியாக்கிக் கொண்டனர், அன்றைய ஆளுங் குழுமத்தினர். இது ஒரு நீண்ட வரலாறு என்பது நமக்கு தெரியும்.

சிங்கள மேட்டுக்குடிகளின் ஆதிக்கத்தில் அரசை ஒப்படைத்து சென்ற பிரிட்டிஷாருக்கும் அரசு அதிகாரத்தை கையகப்படுத்தி கொண்டவர்களுக்கும் இடையில் நீண்ட கால இரகசிய ஒப்பந்தம் உருவாகியிருந்தது. என்றென்றைக்கும் சிறிலங்கா அரசு ஏகாதிபத்திய சார்பு நிலை என்பதே அதுவாகும். அரசியல் ரீதியில் மட்டுமல்ல பொருளாதார ரீதியிலும்தான். இந்த நிலை இன்றுவரை தொடர்கின்றது. மேலும், தற்போது ஒருபடி மேலாக இது அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடனான நெருக்கமான உறவாகவும் பரிணமித்துள்ளது.

அன்று அரசை கையகப்படுத்திக் கொண்டவர்களின் இன்றைய வாரிசுகள் தான் முன்னெப்போதையும் விட கொடூரமான முறையில் இன்று அரச ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர். இங்கு சிறிலங்காவில் உள்ள கட்சிகளை விட்டு விட்டு அதன் பின்னாலுள்ள ஆளுங்குழுமத்தைப் பார்த்தோமெனில் தெளிவாகவே இது தெரிய வரும். மேலும், சிறிலங்கா அரசின் நீதித்துறை, சட்டவாக்கதுறை, நிதி, நிர்வாகத்துறைகளில் மற்றும் பாதுகாப்புத் துறைகளிலும், சமூகத்தின் பண்புகளைத் தீர்மானிக்கின்ற செய்தி, கலாச்சார ஊடகங்கள் போன்றவற்றிலும் இவர்கள் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவற்றுடன் சில புதுப் பணக்காரர்கள், புதிய அதிகாரத்துவப் பிரிவினர்களும் ஆயுத வியாபாரிகளும் இணைந்து ஒரு ஆளும் குழுமமாக பலம்பெற்று இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து தற்போதுள்ள ஏகாதிபத்திய சார்பு அரசியல், பொருளாதாரத்தை இன்னும் அதிக விசுவாசத்துடன் கட்டிக் காத்து வருகின்றனர். இடைப்பட்ட காலங்களில் அரசு முற்றிலும் இனவாதத் தன்மை பெற்று விட்டதனால் சிங்கள நடுத்தர பிரிவினர்களும் அரசு நலன்களில் இருந்து தம் பங்கையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கு ஏகாதிபத்தியங்களை விட மற்ற சுதேசிய சமூகத்தவரே விரோதிகளாக தெரிந்தனர். இது ஆளும் குழுமத்திற்கு மேலும் வாய்ப்பை திறந்து விட்டுள்ளது. போரை தொடர்ந்து நடாத்துவதற்கு என்ன விலையையும் தர இவர்கள் தயாராக நிற்கின்றனர்.

இதன் விளைவாக இன்று விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சிங்கள மக்களுக்கும் அரசுக்கும் முரண்பாடுகள் அதிகரிக்கிறது. அந்த முரண்பாட்டை தணிக்கும் வகையில் அரசானது, ஈழத் தமிழ், மலையகத்தமிழ் மற்றும் முஸ்லீம் தேசங்கள் மீதான அடக்குமறையை உக்கிரமாக்கியுள்ளது. அரசுக்கும் அடக்கப்படும் தேசங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் தீவிரமடைந்துள்ளது. இதில் முன்னணி முரண்பாடாக நமது தமிழீழ விடுதலைப் போராட்டம் கொந்தளித்து கொண்டிருக்கின்றது. தம்மோடு எல்லாவிதத்திலும் பகையான உறவைக் கொண்டுள்ள ஒரு அரசின் பிரஜைகளாக இருக்கும் நிலைக்கு, தமது இறைமைகள் இந்த அரசினால் பறிக்கப்படும் நிலைக்கு முடிவுகட்ட வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது. இந்த அடக்குமறை அரசானது ஒட்டுமொத்தத்தில் மக்கள் விரோத அரசாகும். இதன் தகர்வு ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல மற்ற மூன்று தேசங்களுக்கும் (முஸ்லீம், மலையகத் தமிழ், சிங்கள) கூட விடுதலையைத் தரும் என்பதில் ஐயமில்லை.

இவ்விதமாக எமது விடுதலைப் போரட்டம், முதன்மையான முரண்பாடாக இருந்து வரும் போதிலும் மற்றைய முரண்பாடுகளின் தார்ப்பரியங்களையும் இணைத்து அவற்றுக்கும் எமக்குமிடையிலான உறவுகளை நுட்பமாக அடையாளம்கண்டு ஆற்றுப்படுத்துவது நமது கடமை. இங்கிருந்து தொடங்கி நமது பார்வை விரிவடைந்து அரை நூற்றாண்டு கால சிங்கள அடக்குமுறை அரசின் ஆதிக்கத்தை தகர்த்து, அதன் நீட்சியாக ஈற்றில் இந்த அடக்குமுறை அரசை கட்டிக் காப்பாற்றி வரும் ஏகாதிபத்திய முகாம்களுக்கும் ஒரு தோல்வியை தர வேண்டும். இந்த இலக்கு நோக்கி நமது உத்திகள் அமைய வேண்டும். இதுவே தவிர்க்க முடியாத அரசியல் விதியாக உள்ளது.

★

## பெண் உடல்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ஐ. ஆர். ஏ. பெண் போராளிகளை சிறைக்கூடங்களிலடைத்து சித்திரவதை செய்யும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்
- போராளிப் பெண்களின் விடுதலை உணர்வை சிதைப்பதற்கென்றே திட்டமிட்ட முறையில் ஏகாதிபத்தியங்களால் மேற்கொள்ளப்படும் அவமானப்படுத்தல்கள், சித்திரவதைகள்... இதில் பாலியல் சித்திரவதைகள் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கென்றே சிறிலங்கா உட்பட தமது அடிவருடி நாடுகளுக்கு அவை அளித்துவரும் விசேட சித்திரவதைப் பயிற்சிகள்...

இப்படியாக ஏகாதிபத்தியங்களால் மேற்கொள்ளப்படும் கொடூரங்கள் எல்லாம் மிகவும் சாதுரியமாக மறைக்கப்பட்டு விடுதலைப் போராட்டங்களின் மீதும் போராளிப் பெண்களின் மீதும் மாத்திரம் குற்றச்சாட்டுகளும் அவமானப்படுத்தல்களும் முன்வைக்கப்படுவதன் பின்னாலுள்ள ஏகாதிபத்திய சுதியை இனங்காண வேண்டும்.

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவ முறைமையும் ஆணாதிக்க முறைமையும் பரஸ்பரப் பலப்படுத்தலின் மூலம் இறுகிப் பிணைந்திருக்கும் அவற்றின் உச்சகட்டமாகும். ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட பெண்ணிய சார்பு அரசொன்றை அமைப்பதற்கு ஏகாதிபத்தியங்கள் இலகுவில் அனுமதிக்கப் போவதில்லை. நாம் கனவு காணும் சமூக வாழ்வை அமைப்பதற்காக மேற்கொள்ளும் பெண் விடுதலைப் போராட்டம் முழுமை பெற வேண்டுமானால் அப்போராட்டமானது தவிர்க்க முடியாது ஏகாதிபத்திய அமைப்பிற்கெதிரான போராட்டமாகவும் பரிணமித்திட வேண்டும் என்பதையே வரலாறு நமக்கு சுட்டிநிற்கிறது.

தமது பொருளாதார, அரசியல், இராணுவ, நலன்களுக்காக பெண்களை பல்வேறு வழிமுறைகளுடாகவும் சுரண்டும், துன்புறுத்தும், அடக்கும் ஏகாதிபத்தியங்களுக்கெதிராக உலகில் அனைத்துப் பாகங்களிலும் போராடிக் கொண்டிருக்கும் நமது சகோதரிகளுடன் ஒருமைப்பாட்டையும் சகோதரித்துவத்தையும் கட்டியெழுப்புவதன் ஊடாக ஏகாதிபத்தியத்திற்கெதிரான பெண்களின் கூட்டமைப்பை உருவாக்குவோம். எதிர்கால மானுட வரலாற்றைப் படைத்திடும் பாதையில் பெண்கள் நாம் ஆளுமை செலுத்த முயல்வதை இழிவுபடுத்தும், எம்மை அழித்தொழிப்பதற்கு தனது சித்திரவதைப் படைகளை ஏவிடும் ஏகாதிபத்தியங்களைத் தோற்கடிப்பதற்கான பெண்களின் கூட்டமைப்புகளை உலகளாவிய அளவில் கட்டியெழுப்பும் சகோதரித்துவக் கடமையில் தமிழீழப் பெண்களான நாமும் பங்காளிகளாவோம்.

★

## கிழக்குத் திமோர்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைகின்றன. முக்கியமாக அமெரிக்காவிற்கு இது இராணுவரீதியாக தேவைப்படும் எனக் கருதப்படுகின்றது. ஆகவே இதன் அரசியல் மாற்றங்களை தனக்கு சாதகமாக மாற்றுவதில் அமெரிக்காவும் முனைப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தோனிசிய ஜனாதிபதி சுகர்ட்டோவின் சர்வதிகார ஆட்சியின் பின் பதவியேற்றார் புதிய ஜனாதிபதி பி அவர்கள், இவர் 98ம் ஆண்டு கிழக்கு திமோருக்கு "விசேட தகுதியை" (special status) வழங்கினார். மற்றும் கிழக்கு திமோர் பிரச்சினையை சுமுகமாக தீர்க்கும் நோக்குடன் ஓகஸ்ட் 30ம் திகதி சர்வசன வாக்கெடுப்பு நடாத்தவும் தீர்மானித்தார். மேலும் கிழக்கு திமோர் தலைவரை சிறையிலிருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றமும் செய்தார். இருப்பினும் இவரை விடுதலை செய்யும்படி பல முனைகளிலுமிருந்து கோரிக்கைகள் வந்த வண்ணமுள்ளன. கிழக்கு திமோர் மக்களின் விடுதலையும் இவரது விடுதலையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவையாக உள்ளன.

இதைவிட கிழக்கு திமோர் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறும் வாய்ப்பு நிச்சயமானது என்பதால் இராணுவ தரப்பு திட்டமிட்டு உள்நாட்டுக் கலவரத்தை தூண்டி விட்டுள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். இந்தோனிசிய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஆயுதக் கும்பல்களைக் கொண்டு இவ்வாறான கலவரங்களை நடாத்துகின்றனர்.

கிழக்கு திமோர் மக்கள், மற்றும் கிழக்கு திமோரின் சுதந்திரத்திற்கான புரட்சிகர முன்னணியையும், அதன் தலைவர்களைப் பொறுத்தவரை, "பூரணமான தனி சுதந்திர கிழக்கு திமோர் குடியரசை உருவாக்கும் வரை போராட்டம் தொடரும்" எனக் கூறுகின்றனர். மேலும், "நாம் கிழக்கு திமோரில் வாழும் அல்லது இந்தோனிசியாவில் வாழும் சாதாரண இந்தோனிசிய குடிமக்கள் யாரையும் இதுவரை கொன்றதில்லை. அவர்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் இதுவரை ஈடுபட்டதில்லை. பயங்காரவாதச் செயல்கள் என சர்வதேசம் கருதும் எந்த நடவடிக்கைகளையும் நாம் இதுவரை செய்ததில்லை. எம்மைப் பொறுத்தவரை இந்தோனிசிய அரசும் அதன் ஆக்கிரமிப்பு இராணுவமும் தான் நமது எதிரி. அவர்களுக்கு எதிராகவே நாம் போராடுகின்றோம்" என தெளிவாகவே கூறியுள்ளனர்.

★

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

www.thamileelam.org

உலகம் முழுவதும் ஏகாதிபத்தியம் செய்து வரும் அட்டுழிங்களை கண்டு, அடக்குமுறைக்கு எதிராக போராடுபவர்கள் என்ற வகையில் நமது மக்களும் உள்ளூர குமுறுகின்றனர். ஆனால் இந்த குமுறலானது அவ்வப்போது எழுந்து அடங்கி விடுவதாக உள்ளது. இதற்கு பிரதான காரணம் ஏகாதிபத்தியம் நேரடியாகவும் மறைமுகமாகவும் எம்மை அன்றாடம் நசுக்கிக்கொண்டிருப்பதை பிரக்ஞைமட்டத்தில் நாம் இன்னமும் உணர்ந்து கொள்ளாமைதான். இதனால்தான் ஏகாதிபத்தியங்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான இரகசிய பரகசிய உறவுகள் நமது கண்களுக்கு எளிதில் புலப்படுவதில்லை. நமது பிரச்சனைகளுக்கு தீர்வு தேடி நிபந்தனை இன்றி அவர்களையே நாடுகின்ற மாயைக்குள் நாமும் அகப்பட்டு கொள்கின்றோம்.

ஏகாதிபத்தியங்களின் கட்டளைகளை பிசகின்றி பின்பற்றும் சிங்கள அடக்குமுறை, பிற்போக்கு அரசுகள் போன்ற பல்வேறு அரசுகளின் நிலைத்தலில்தான் வல்லரசியங்களின் அடிப்படை இருத்தலும் தங்கியுள்ளது என்பதை நாம் ஆழமாக புரிந்து கொண்டால்தான், நம்மீது திணிக்கப்பட்டுள்ள இந்த நீடித்த யுத்தத்தின் பின்புலத்தை சரிவர புரிந்து கொள்ள முடியும்.

காலத்திற்கு காலம் ஏகாதிபத்தியங்களினதும் உள்ளூர் அரசுகளினதும் கட்டுத்தளைகளை தகர்த்துக்கொண்டு மக்கள் போராட்டங்கள் வெடிக்கின்றன. இம்மக்களை மீளவும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர, போராட்டத்தை தமது நலன்களுக்கு கீழ்ப்படுத்தவுமாக போராடும் தரப்பின் ஒரு பகுதியினரை தமது சிந்தாந்த, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரும் முயற்சிகளையும் ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து மேற்கொண்டபடி உள்ளன. நீலன் போன்றவர்களுக்கான ஏகாதிபத்தியங்களின் கண்டனங்களையும் அனுதாபங்களையும் இந்த பின்னணியில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நீலன் என்ற தமிழனுக்காக அல்ல தமது நம்பகமான பிரதிக்காகவே இந்த கண்டனங்கள். அடக்கப்படும் மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொண்டு அதற்காக குரல் எழுப்பமாட்டார்கள் என்பதற்காவே ஏகாதிபத்தியங்கள் இப்படியானவர்களை தமது சித்தாந்த பிரதிநிதிகளாக்கின்றன., இப்படியானவர்கள் என்றென்றைக்கும் தமது மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொண்டு உண்மையான பிரதிநிதிகளாக வரமாட்டார்கள்.

எமது போராட்டத்தை தவிர்க்க முடியாதவாறு நாம் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக வளர்த்து செல்ல வேண்டும். இது ஒரு நீண்ட கால பணியாகும். ஏகாதியங்கள் உலகலவில்தமக்கு சாதகமாக ஒரு அணியை உருவாக்கி பலப்படுத்தி வருகின்றது. தமக்கு எதிரான போராட்டங்களை நசுக்கி வருகின்றது. சிறிய தேசமாகிய நாமும் உலகலாவிய முற்போக்கு கூட்டுடன் எம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இதனை எதிர்கொண்டு முறியடிப்பதற்கான ஒரே வழியாகும். பரஸ்பரம் ஒத்துழைப்புடன் போராட வேண்டும். இதற்கென நீண்ட கால உத்திகளை நாம் வகுக்க வேண்டும். உலகலாவிய மக்கள் தமது விடுதலைக்காக சொந்த எஜமானர்களையும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து நடாத்தும் போராட்டங்களை வெறுமனே ஆதரிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், தேவையான இடத்தில் தேவையான வடிவத்தில் எமது பங்குபற்றுதலும் இருக்க வேண்டும். இதனை எமது அரசியல்திட்டதில் மட்டுமல்ல நடைமுறையிலும் நிருபிக்க வேண்டும். உலகப்புரட்சியாளர் சேகுவெராவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள நிறையவே உண்டு.

மேலும், 1982 ம் ஆண்டு பலஸ்தீன விடுதலை போராட்டம் மோசமாக நெருக்கடியை சந்தித்த போது, அதற்கு பின்புலமாக ஏகாதிபத்தியங்கள் நின்றன. இதனால், உலகலாவிய போராட்டத்தின் மூலமான ஏகாதிபத்தியத்தின் தோல்வியில்தான் பலஸ்தீனத்தின் உண்மையான விடுதலை சாத்தியமாகும். எனவே உலகு தழுவிய புரட்சிகர அணிகளுடன் தம்மை நெருக்கமாக தம்மை இணைத்துக்கொள்வது என்ற மிக சரியான ஒரு முடிவினை பிஎல்லோ மேற்கொண்டனர் என்பதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதே.

கோணேஸ்வரி, கிருசாந்தி வன்புணர்ச்சிக்கொலைகள் அம்பலத்திற்கு வந்ததும் இதுபோன்ற கேடுகளுக்கு இனிமேலாவது முடிவு கட்டப்படும் என்ற நப்பாசை நம்மில் பலருக்கு ஏற்பட்டதுண்டு. அப்படிப்பட்ட தவிர்க்க முடியாத சூழலில் அடக்குமுறையாளர்கள் இதனை கண்துடைப்பாக மட்டும் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பது மறுபடியும் உண்மையாகி உள்ளது, இதன் பக்க விளைவாக செம்மணி விவகாரம் உருப்பெற்றது ஒரு தற்செயலாகும். ஐடா காமலிற்றா என நிகழ்வுகள் இன்னமும் தொடர்கின்றன. இதற்கு முற்றிலுமாக முடிவு கட்டுவதற்கு ஒரே நிபந்தனை ஆக்கிரமிப்பு படைகளும் அதன் நிர்வாக இயந்திரமும் நமது தாயகத்தை விட்டு வெளியேற்றப்படுவதுதான்.

தம்மீதான அடக்குமறைகளின் எந்த வடிவத்தையும் மக்கள் என்ன விலை கொடுத்தும் தகர்த்தெறிவர் என்பதற்கு கிழக்கு திமோர் மக்களின் விட்டுககொடாத போராட்டம் உயிருள்ள மற்றுமொரு உதாரணமாகும். இதிலிருந்து பல படிப்பினைகளை நாம பெற வேண்டும். இந்தோனேசிய பிற்போக்கு அரசானது, இதுவரை பலமாக இருந்தவரையும் மௌனம் சாதித்து வந்த ஏகாதிபத்தியங்களும் ஐநாவும் தற்போது ஒரு புரட்சிகர விடுதலைக்கு கிழக்குதிமோர் பாயும் ஒரு கட்டததில் அவசர அவசரமான சமாதான தீர்விற்கு வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்துள்ளதன் பின்புலத்தை நாம் விளங்கிக்கொள்வது முக்கியமாகும்.

ஆசிரியர் குழு -15-09-99

## மக்கள் களம்

1. கட்சிப்பத்திரிகை தொடர்பான கருத்துக்களை அபிப்பிராயங்களை எங்களிடமிருந்து (மக்கள்) கேட்க விரும்புகின்றீர்கள். இதில் ஆர்வமாகவும் செயற்படுகின்றீர்கள். நல்லது. வரவேற்கின்றோம். ஆனால் இச்செயற்பாடு கட்சியினதும் மற்றும் அங்கத்தவர்களினதும் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் விமர்சிப்பதற்குமான உரிமையை மக்களிடம் தருவதாக உள்ளது. மக்களிற்காக செயற்படும் யாரையும் விமர்சிக்கும் உரிமை எங்களின் பிறப்புரிமை. இருப்பினும் கடந்தகால அனுபவங்கள் இவ்வாறான உரிமையை அமைப்பிலுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிந்தே எமது விமர்சனங்களை முன்வைக்கவேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலை எங்களுக்கு. நாம் உங்களை நம்பி கருத்துகள் கூறுவதில் பங்கெடுப்பதற்கு எங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இந்த நம்பிக்கையை எவ்வாறு தரப்போகின்றீர்கள். கட்சியின் கருத்தாக வெளிவருபவை கட்சி அங்கத்தவர்களது ஒருமித்த கருத்தா? உங்களுக்குள் பொதுவான உடன்பாடுகள் உள்ளனவா? இவ்வாறான கேள்விகளை முன்னெச்சரிக்கையுடன் நாம் கேட்க வேண்டியுள்ளது.

திரிசுடர் - கனடா

2. மனிதவதை நல்ல கட்டுரை. நீங்கள் வளர்ந்து வரும் என்ற கட்சி அடிப்படையில் நீங்கள் முன்வைக்கும் விமர்சனங்கள் ஆரோக்கியமானவையாக இருக்கவேண்டும். உங்களுடைய கட்சி பரந்தளவில் அறிமுகமாகவில்லை. உங்களைப் பரந்தளவில் புரிந்துள்ளார்களா என்பது கேள்வி. இவ்வாறன நிலையில் நமது போராட்டத்தில் நடந்த நடைபெறும் தவறுகள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது உண்மையானாலும் நீங்கள் உடனடியாக இதைச் செய்வது ஆரோக்கியமானதா? இது உங்களது கட்சியையும் இதன் செயற்பாட்டையும் புறந்தள்ளிவிடலாம் அல்லவா? போராட்ட சக்திகளுக்கிடையில் ஆரோக்கியமான உறவும் ஆழமான புரிந்துணர்வும் இருக்கும் பொழுது இவ்வாறான செயற்பாடுகள் பயனுள்ளவகையில் தாக்கத்தை ஏற்படுத்தலாமல்லவா? இதற்கு நீங்கள் பலமானதும் உறுதியானதுமான போராடும் அமைப்பாக நிலைபெறவேண்டியது முதல்நிபந்தனை அல்லவா?

சஞ்சாரி - திருமலை

3. முதல்மூன்று பத்திரிகைகளும் நன்றாகவும் சிவப்பு நிறத்திலும் வந்தன. நான்காவது அரசியல்திட்டத்தை கொண்டு சமாளித்துள்ளீர்கள். ஐந்தாவது பத்திரிகை கருப்பில் வந்தது. இப்படியே தேய்ந்து போய்விடுமா பத்திரிகை? கட்சி எப்படியோ?

தேவன் - ஜெர்மனி

4. எல்லா அமைப்புகளின் ஆரம்பத்திலையுமே இவ்வாறன மனிதவதை போன்ற நல்ல கட்டுரைகள் வெளிவரும். இதன்மூலம் தம்மை மற்றவர்களை விட சிறந்தவர்களாக காண்பிப்பார்கள். செயற்பட ஆரம்பித்த பின்பும் அதிகாரம் கைகளில் வந்தபின்புமே உண்மையான சுயரூபம் தெரியவரும். அமைப்பிற்குள் ஆதிக்கம் செலுத்தும் ஆணாதிக்கம் வெளிவரும். நீங்கயுள் இவ்வாறான பலமான அமைப்பாக வந்தபின்பு நீங்கள் சகோரத படுகொலைகள் செய்யமாட்டீர்கள் என்பதற்கும் சித்திரவதை செய்யமாட்டீர்கள் என்பதற்கும் அதிகார துஸ்பிரயோகங்கள் கட்சிக்குள்ளும் வெளியிலும் நடைபெறாது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

மனசாட்சி - மலையகம்

5. நமது சமூகத்தில் காணப்படும் பிற்போக்குத்தனங்களும் மற்றும் பலவகை குறைபாடுகளும்தான் சித்திரவதைகளுக்கும் சகோதரப்படுகொலைகளுக்கும் காரணம் எனக் கூறியுள்ளீர்கள். ஏன் அதிக்க சக்திகளின் வல்லரசுகளின் பங்களிப்பு இவற்றுக்கு இல்லையா? வெறுமனே நமது பலவீனங்கள் மட்டும்தானா?

சக்தி - யாழ்

6- வடிவம் நன்றாக உள்ளது. எமது பிரதேசததிற்கு ஏற்ப பாதுகாப்பானதாக உள்ளது. எடுத்துச்செல்லவும் மற்றவர்களுக்கு கொடுக்கவும் இலகுவாக உள்ளது. உள்ளடக்கத்தில் 3 வது பததிரிகைதான கிடைத்தது. சிறுவர் பகுதி சிறப்பானதாக வித்தியாசமாக பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்த நிலைமையில் சிறுவர்களின் பாதிப்பை புள்ளி விவரங்களுடன் தந்திருக்கலாம்.

கமலநாயகம்
யாழ்ப்பாணம்

லண்டன் தொடகட்கு:

BM BOX 6769
LONDON
WC1 3XX
Tel: 07 04 1 37 20 64

கனடா தொடர்புகட்கு:

300 BOROUGH DR
PO BOX 47032
SCARBOROUGH, ONT
M1P 4ZP